

ஆற்காடு நகரில் மாவட்ட மருத்துவ அணி சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடந்த இரத்ததான முகாம் மற்றும் நல உதவிகள் வழங்கிய நிகழ்வினை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். உடன் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஏ.கே.சுந்தரமூர்த்தி, டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், ஏ.வி.சரவணன் உள்ளிட்டோர் உள்ளனர்.



நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள நடராஜன் தமயந்தி மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவச் செல்வங்களைச் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். மாணவச் செல்வங்களே மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தேர்வு எழுதுங்கள் என்று கூறினார்.

### திராவிடச் செம்மல்

# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாழ்க பல்லாண்டு!

"மதம் எனல் தமிழ் வையத்தின் பகை!

ஆள்வோர் என்றும் அடங்குவோர்
என்றும்
பிறந்தார் என்பது சரடு!

தனி ஒரு மனிதன் தன் விருப்பப்படி
இனி நாட்டைஆள்தென்பதில்லை!

மக்கள் சரிநிகர்!
எல்லாத் துறையிலும் எவரும் நிகரே!
நெடு நாட்டு மக்களின் படியினர்
குடியரசு நாட்டல் எம்கொள்கையாகும்"–

என்றார் நம் புரட்சிக் கவிஞர்
பல்லாண்டுகளுக்கு முன்பே!

இன்றோ குடியரசு நெறி துறந்து
இந்தி வெறி கொண்ட ஆள்பவர்
அடக்கி ஆள முயன்று நிற்கின்றனர்!

அரசமைப்புச் சட்ட அட்டவணையில்
ஆட்சி மொழிகள் இருபத்திரண்டு
செம்மொழியாம் தமிழ் உட்படப்
பல செம்மொழிகள் உண்டு!

இந்தி மொழியை மட்டுமே
அலுவல் மொழி என்பது
குடியரசு நாட்டைத் தகர்க்கும்
வெடி குண்டு!

பெரியார் –அண்ணா– கலைஞர்
தமிழாய்ந்து தெளிந்த அறிஞர்கள்
களம் கண்டுச் சிறைச் சென்று
மீட்டெடுத்த உரிமையைப்
பறிக்க முடியுமா?

அனைத்து முற்போக்குக் கட்சியினரும்
அணி திரண்டு எதிர்க்கின்றனர்
இந்தி மொழித் திணிப்பை!

அனைத்து மாநில மக்களுக்கும்
நாடாளுமன்ற அவையில்
சம அளவில் உறுப்பினர் கோருவது
கூட்டாட்சி இயலின் அடிப்படை !

அறிஞர் அண்ணா அன்றே சொன்னார்
நாடாளுமன்ற மேலவையில்
இந்தியா ஒரு நாடன்று
இது ஒரு துணைக்கண்டம் என்று!

இத்தகைய வரலாற்று உயர் மரபை
மக்கள் மன்றத்தில் சொல்கிறார்
அகில இந்தியாவிற்கும்
எடுத்துச் செல்கிறார்!

மற்ற மாநில மக்கள் விழிப்புணர்வு
பெறுகின்றனர்
மாநில முதல்வர்களும்
தம் தம் மொழி காக்க
அரசாணைகளை வெளியிடுகின்றனர்!

மாநில உரிமைகள் பெறவும்
கூட்டாட்சிக் குடியரசு மலரவும்
அரும் பெரும் பணிகளைச்
செவ்வனவே ஆற்றிவரும்
நம் முதல்வர் வாழ்க!

திராவிடச் செம்மல்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
வாழ்க பல்லாண்டு! வாழ்க பல்லாண்டு! என
வாழ்த்துக்களைக் குவிப்போம் !



பேராசிரியர்
**மு.நாகநாதன்**



முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் ஒன்றியம் மற்றும் ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள தனியார் முதியோர் காப்பகத்திற்கு ஆறு மாத காலத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி முதியோர் காப்பகத்தில் உள்ள 30க்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு அறுசுவை உணவினை ஒன்றியச் செயலாளர், எஸ்.வி.செந்தில்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு ஆகியோர் வழங்கினர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், கோனப்பன் சாலை செந்தில்குமார், அலங்கியம் ஜாபர் அலி உள்பட பலர் கலந்துகொண்டனர்.


# 24-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பவானி கிட்டு (எ)
ப.சீ.கிருட்டினசாமி

# பவானி கிட்டு (எ)
# ப.சீ.கிருட்டினசாமி

முன்னாள் நகர கழக செயலாளர்,
தலைமை செயற்குழு உறுப்பினர், பவானி நகர தி.மு.க.

**ப.சீ.நாகராசன்,** பவானி நகர கழக செயலாளர்

மனைவி : **K.ராஜம்மாள்**
தம்பி மனைவி : **N.சந்திரா நாகராசன்**

மகன்கள் :
**K.செங்குட்டுவன்** B.E.,
**N.இளங்கோவன்** B.E.,

மருமகள்கள்
**S.ரங்கநாயகி** B.Sc.,
**E.சிந்தூரி** B.E., M.C.,
பவானி நகரமன்ற தலைவர்

பேத்தி : **S.வாசுகி** B.Tech.,
பேரன்கள் : **S.கிருஷ்ணராஜ், E.S.கிருத்திக், E.S.நித்விக்**

## பவானி நகர தி.மு.க.

**இளைஞரணி** மற்றும் **சார்பு அணிகள்**
ஈரோடு மாவட்டம்

**உதயம் நண்பர்கள் குழு, பவானி**